வேல் எடுத்து வில் எடுத்து வீரர் கூடுவர்
ஈழம் வெல்க வெல்க என்று
தமிழர் வாழ்த்து பாடுவர்

மேலெழுந்து பாய்ந்துவரும் கணையை வீழ்த்துவர் அந்த
மேன்மை மிகு வீரமதைக் கவிஞ்யர் பாடுவர் 2

வேல் எடுத்து வில் எடுத்து

காலம் எல்லாம் தமிழராட்சி மணர்ந்த நாடடா
இன்று காளிமகள் மூழி நமை ஆழ்வதேனடா
புல்லர் எல்லாம் தமிழ் குடத்தைப் போட்டுடைப்பதா 2
நாம் பூனையாக மானம் இன்றிப் பார்த்திருப்பதா 2

இரு கரங்கள் சிறகானால் பறந்து செல்வோம்  எம்
இரு கால்கள் துடுப்பானால் மிதந்து செல்வோம் 2
பரு வயிறு கடல் நீரைக் குடித்துத் தீர்த்திடின் 2
அந்த பாக் சந்திக்கடல் தன்னில் நடந்து செல்வோம் 2

செருக்களத்தில் சிங்களத்தார் படையை வெல்வோம்
அதன் செருக்கடக்கி கயவர்களைச் சிறையில் தள்ளுவோம் 2
திருநாளாம் தமிழர்க்கு எந்த நாளடா 2
அது தமிழீழம் விடுதலையை அடையும் நாளடா 2

வேல் எடுத்து வில் எடுத்து ............     .........